தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com www.dhinakani.com

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




மலர் : 02 இதழ் :192 4 - பக்கம் 08.02.2025 சனிக்கிழமை விலை ரூ.6




**ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.**

விளக்கம்:

சுயமுன்னேற்றதிர்க்கான வரைமுறையால் சுயத்தை அறியலாம் சுயமுன்னேற்றதிற்கான வரைமுறை உயிரை விட சிறந்ததாக காக்க வேண்டும்.

## ட்ரம்பின் அவமானகர செயல்: இந்தியா கண்டனம் தெரிவிக்க வேண்டும் - டி. ராஜா



சென்னை: பிப்-08 அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்களை அதிபர் ட்ரம்ப் அவமானப்படுத்தியது, இந்தியாவை அவமானப்படுத்தியது போல் உள்ளது. இதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும்'' என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொது செயலாளர் டி.ராஜா வலியுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து டி.ராஜா சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் இந்தியா முழுவதும் நடைபெற்று வருகிறது. கட்சியின் அகில இந்திய மாநாடு செப்டம்பர் 21 முதல் 25 வரை பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற உள்ளது. அம்பேத்கருக்கு எதிராக பாஜக, ஆர்எஸ்எஸ் பேசி வருகின்றன. பாஜக, ஆர்எஸ்எஸ் சேர்ந்து மத ரீதியான மோதல்களை உருவாக்க முயற்சி செய்து வருகின்றன.

இந்திய பொருளாதாரம் தனியார்மயம் ஆக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான அரசாக செயல்படுகிறது. பெரு முதலாளிகளிடம் பொதுத் துறை நிறுவனங்கள் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. வேலை இல்லாதிண்டாட்டம், விலைவாசி, பணவீக்கம் அதிகரித்து உள்ளது. ரூபாய் மதிப்பு வீழ்ச்சி அடைந்து உள்ளது. அந்நிய செலாவணி கடன் அதிகரித்து உள்ளது.

இந்த பட்ஜெட் ஏழைகளை வஞ்சித்துள்ளது. பட்ஜெட்டை எதிர்த்து நாடு போராட்டம் நடத்தி வருகிறோம். வரும் 14 முதல் 20 -ம் தேதி வரை நாடு தழுவிய அளவில் மக்களை சந்திக்கும் பேரியக்கம் நடத்தப்படும். மார்ச் 23 முதல் ஏப்ரல் 14 வரை சமூக நீதி, சமத்துவம், பாஜக அரசிலிருந்து மக்களை காப்பதற்காக அரசியல் சித்தாந்த பேரியக்கத்தை நடத்த உள்ளோம்.

அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் காலில் சங்கிலியால் கட்டி விமானத்தில் அழைத்து வரப்பட்டதைக் கண்டு நாடே அதிர்ச்சி அடைந்துள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இந்தியர்களை அவமானப்படுத்தியது, இந்தியாவை அவமானப்படுத்தியது போல் ஆகும். இந்தியா இதற்கு வன்மையான கண்டனத்தை தெரிவிக்க வேண்டும்.

## மசோதாக்கள் மீது முடிவு எடுக்காமல் ஏன்? உச்ச நீதிமன்றம் ஆளுநரை கேள்வி கேட்டது




புதுடெல்லி: பிப்-08 தமிழக அரசு சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களை ஆளுநர் கடந்த 3 ஆண்டுகளாக நிறுத்தி வைத்து மவுனம் காப்பது ஏன் என்பது குறித்து ஆதாரப்பூர்வமாக விளக்கம் அளிக்குமாறு மத்திய அரசின் அட்டர்னி ஜெனரலுக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய பல்வேறு மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டுள்ள ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. உச்ச நீதிமன்றநீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, ஆர். மகாதேவன் அமர்வில் இந்த வழக்குகள் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தன.

அப்போது நடந்த வாதம்: தமிழக அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் முகுல் ரோஹ்தகி, ராகேஷ் திவேதி, பி.வில்சன், அபிஷேக் சிங்வி: ஆளுநர் தனக்கு அனுப்பிய மசோதாக்களின் தன்மையை ஆராயாமல் ஒருவித வெறுப்பு உணர்வுடன் செயல்படுகிறார். குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்வதானாலும், அதுபற்றி தமிழக அரசுடன் ஆலோசித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை. சட்டப்பேரவையில் மசோதாக்கள் குறித்து அரசு எடுத்த முடிவின்மீது ஆளுநர் எந்த முடிவும் எடுக்காமல் கிடப்பில் போட முடியாது. தனது சொந்த விருப்பத்தையும் அதில் புகுத்த முடியாது. ஒரு மசோதாவை திருப்பி அனுப்பினால் அதற்கான காரணத்தை விளக்க வேண்டும். அவரது செயல்பாட்டால் துணைவேந்தர்களை நியமிக்க முடியவில்லை. மாநில அரசின் அதிகாரத்தில் தேவையின்றி குறுக்கிட்டு மத்திய அரசின் ஏஜென்ட்போல செயல்படுகிறார். அரசியலமைப்பு சட்டம், உச்சநீதிமன்ற உத்தரவுகள், மாநில அமைச்சரவையின் முடிவுகள் ஆகியவற்றை மதிப்பதில்லை.

மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல் ஆர்.வெங்கடரமணி: ஆளுநரின் செயல்பாடுகள் கூடுதலாக சித்தரிக்கப்பட்டுள்ளது. மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி மட்டுமே வைத்தார். மறுபரிசீலனை செய்யுமாறு திருப்பி அனுப்பவில்லை. இவ்வாறு வாதம் நடந்தது.

இதையடுத்து நீதிபதிகள் கூறியதாவது: ஆளுநரின் பதவி, அதிகாரத்தை நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை. அதேநேரம் மசோதாக்களை கிடப்பில் போட்டுள்ள அவரது செயல்பாடு குறித்து மட்டுமே விசாரிக்கிறோம். தமிழக அரசு நிறைவேற்றி அனுப்பிய 14 மசோதாக்களில் இரண்டை மட்டும் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்தது ஏன்? மற்ற 12 மசோதாக்களை 3 ஆண்டுகளாக ஆளுநர் ஆய்வு செய்கிறாரா? மசோதாக்கள் மறு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டால் கிடப்பில் போட்டு மவுனம் காப்பது ஏன்? குடியரசுத் தலைவர் அதில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? ஆளுநரின் உண்மையான செயல்பாடு என்ன என்பது சட்டப்பேரவைக்கு எப்படி தெரியவரும்? அரசு செய்யும் விஷயங்கள் பிடிக்கவில்லை என்றால் அது ஆளுநரின் சொந்த கருத்துதானே? மசோதாக்கள் மீது முடிவு எடுக்காமல் ஆண்டுக்கணக்கில் நிறுத்திவைக்க அரசியலமைப்பு சட்டத்தில் வழிவகை உள்ளதா? மசோதாக்களை ஆளுநர் கடந்த 3 ஆண்டுகளாக ஏன் நிறுத்தி வைத்தார் என்பதை ஆதாரப்பூர்வமாக விளக்க வேண்டும். இவ்வாறு மத்திய அரசின் அட்டர்னி ஜெனரலுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை இன்றைக்கு தள்ளிவைத்தனர்.

# தமிழகத்துக்கு மத்திய அரசு அளித்தது வெறும் ரூ.276 கோடி — மோடி அரசை விமர்சித்த முதல்வர் ஸ்டாலின்






திருநெல்வேலி:பிப்-08 "இந்தியாவின் வரைபடத்தில் மட்டும் தமிழகம் இருந்தால் போதுமா? அரசு வெளியிடுகிற நிதிநிலை அறிக்கையில் இருக்க வேண்டாமா? மத்திய அரசின் திட்டங்களில் தமிழகத்தின் பெயர் இருக்க வேண்டாமா? தமிழகத்துக்கு சிறப்புத் திட்டங்கள் அறிவிக்க வேண்டாமா? தேர்தல் நேரத்தில் வாக்கு சேகரிக்க மட்டும் தமிழகத்துக்கு வந்தால் போதுமென்று நினைக்கிறார்களா? இப்படி நாம் கேட்கிற கேள்விகளுக்கு பாஜக-விடமிருந்து எந்த பதிலும் வராது. திருநெல்வேலி அல்வா என்றால் உலகளவில் பேமஸ். ஆனால், இப்போது மாநிலங்களுக்கு மத்திய அரசு தரும் அல்வாதான் அதைவிட பேமஸாக இருக்கிறது.'' என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

திருநெல்வேலியில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப்பணிகள் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: 2023 டிசம்பரில் எப்படிப்பட்ட கனமழை பெய்தது என்பது அனைவருக்கும் தெரியும். அந்த கனமழையால் திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டது என்பதை அனைவருக்கும் தெரியும். அந்த பாதிப்புகளில் இருந்து மீள மத்திய அரசிடம் தமிழக அரசின் சார்பில் நிதி கோரினோம். இரண்டு மத்திய அமைச்சர்கள் தமிழகம் வந்தனர். ஆனால், அவர்கள் உடனடியாக இடைக்கால நிதி உதவியைக் கூட செய்யவில்லை.

பாஜக எம்எல்ஏ நயினார் நாகேந்திரன் கோபித்துக்கொள்ளக்கூடாது. அவருக்கும் உண்மைத் தெரியும். ஆனால், அவர் பேசமாட்டார். நீங்கள் பேசுங்கள் என்றுதான் எனக்கு அனுமதி கொடுப்பார். இருப்பினும் மாநில அரசின் நிதிகளை வைத்து, நிவாரணப் பணிகளை நாம் செய்தோம். தொடர்ந்து மத்திய அரசிடம் நிதி கேட்டு வலியுறுத்தினோம். கொடுத்த மத்திய அரசைக் கண்டித்தோம். அப்போதும் நிதி வரவில்லை. நாடாளுமன்றத்திலும் இதுகுறித்து பேசினோம், அப்போதும் வரவில்லை. ஏன் நீதிமன்றம் சென்றோம். அதன்பிறகுதான், தமிழகத்துக்கு மத்திய அரசு வெள்ள நிவாரண நிதியை அறிவித்தது.

வெள்ள நிவாரணமாக நாம் கேட்டது ரூ.37 ஆயிரத்து 907 கோடி. வேறு வழியில்லாமல் மத்திய அரசு நிதி கொடுத்தது எவ்வளவு தெரியுமா? வெறும் ரூ.276 கோடி. நாம் கேட்ட நிதியில் ஒரு விழுக்காட்டைக் கூட மத்திய அரசு கொடுக்கவில்லை. இப்படித்தான் மத்திய அரசு நடந்து கொண்டிருக்கிறது. சரிபோகட்டும், இந்த பட்ஜெட்டில் ஆவது தமிழகம் கோரிய நிதியை ஒதுக்கித் தருவார்கள் என்று எதிர்பார்த்தோம். அதுவும் இல்லை. தமிழகத்துக்கு நிதியும் கிடையாது, நீதியும் கிடையாது என்று ஒதுக்கிவிட்டார்கள்.

தமிழகத்தை மீண்டும் மீண்டும் வஞ்சிக்கிறது மத்திய பாஜக அரசு. அவர்களைப் பொருத்தவரை கூட்டணியில் இருக்கக்கூடிய மாநிலங்களுக்கும், தேர்தல் வரக்கூடிய மாநிலங்களுக்கும் மட்டும்தான் அறிவிப்புகளையும், நிதியையும் கொடுப்பார்கள். அதனால்தான் நாம் கேட்கிறோம். இந்தியாவின் வரைபடத்தில் மட்டும் தமிழகம் இருந்தால் போதுமா? அரசு வெளியிடுகிற நிதிநிலை அறிக்கையில் இருக்க வேண்டாமா? மத்திய அரசின் திட்டங்களில் தமிழகத்தின் பெயர் இருக்க வேண்டாமா?

தமிழகத்துக்கு சிறப்புத் திட்டங்கள் அறிவிக்க வேண்டாமா? தேர்தல் நேரத்தில் வாக்கு சேகரிக்க மட்டும் தமிழகத்துக்கு வந்தால் போதுமென்று நினைக்கிறார்களா? இப்படி நாம் கேட்கிற கேள்விகளுக்கு பாஜக-விடமிருந்து எந்த பதிலும் வராது. திருநெல்வேலி அல்வா என்றால் உலகளவில் பேமஸ். ஆனால், இப்போது மாநிலங்களுக்கு மத்திய அரசு தரும் அல்வாதான் அதைவிட பேமஸாக இருக்கிறது.

மத்திய அரசைப் பொருட்படுத்தாமல், நமக்கு நாமே தமிழகத்தை மேம்படுத்தி வருகிறது திராவிட மாடல் அரசு. அதனால்தான் மத்திய அரசு வெளியிடுகிற அனைத்து புள்ளி விவரங்களிலும், தமிழகம் முன்னிலையில் இருக்கிறது. அதற்கு காரணம், வாக்களித்த மக்களான உங்களுக்கு நாங்கள் உண்மையாக இருக்கிறோம். மத்திய அரசின் மீது குறை கூறிவிட்டு, எந்த திட்டங்களையும் உருவாக்காமல் நாங்கள் விட்டுவிடவில்லை. நாளுக்கு நாள் புதிய திட்டங்கள் வந்துகொண்டே இருக்கிறது. நாங்கள் உருவாக்கிக் கொண்டே இருப்போம், என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## நாய்கள் கடித்து 30- ஆடுகள் பலி நிவாரணம் கேட்டு ஆடுகளின் இறந்த உடல்களுடன் விவசாயிகள் மூலனூர் காவல் நிலையம் முன்பு சாலை மறியல் போராட்டம்!.



திருப்பூர்: பிப்-08 மாவட்டம் தாராபுரத்தை அடுத்துள்ள கருப்பண்ணன் வலசு ஊராட்சி பட்டத்து பாளையம் வேலுச்சாமி வெள்ளியங்காடு தோட்டத்தை சேர்ந்த விவசாயி கங்குசாமி-(வயது75) தனது தோட்டத்தில், 40 செம்மறி ஆடுகளை வளர்த்து வருகிறார்.

நேற்று மாலை வழக்கம்போல் பட்டியில் ஆடுகளை அடைத்து சென்றார். இன்று காலை பட்டிக்கு சென்று பார்த்த-போது, 25 ஆடுகள், 5 குட்டிகள் இறந்து கிடந்தன. மூலனூர் வருவாய் ஆய்வாளர், கால்நடை மருத்து-வர்கள் மற்றும் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

கால்நடை மருத்துவர் இறந்த ஆடுகளை பரிசோதித்தார். உயிருக்கு போரா-டிய இரண்டு ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இறந்த ஆடுகளின் மதிப்பு, 2 லட்சம் ரூபாய் இருக்கும். வெறிநாய்கள் கடித்து ஆடுகள் பலியானதை கண்டித்து, மூலனூர் அண்ணா நகர் பகுதியில் உள்ள தாராபுரம்-கரூர் மெயின் சாலையில் காவல் நிலையம் முன்பு, 100-க்கும் விவசாயிகள், இறந்த ஆடுகளுடன் சாலையை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மூலனூர் பேரூராட்சி மற்றும் கருப்பன் வலசு ஊராட்சி நிர்வாகம் தெருநாய்களை கட்டுப்படுத்த வேண்டும். உணவக இறைச்சி கழிவுகளை பொது இடங்களில் கொட்டும் நபர்கள் மீது வழக்குப்பதிவு செய்யவேண்டும்.

தெரு-நாய்களால் பலியாகும் கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர்.


தாராபுரம் டி.எஸ்.பி., சுரேஷ்குமார் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். தெருநாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

இருப்பினும் இறந்த ஆடுகளுக்கு 2,லட்சம் இழப்பீடு உடனடியாக வழங்குமாறும் மேலும் இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திருப்பூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் தாராபுரம் கரூர் சாலையில் ஒரு மணி நேரமாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மூலனூர் பகுதியில் தினமும், தெருநாய்களால் ஆடுகள் பலியாவது தொடர்வதால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

## தென்காசி மாவட்டத்தில் விதி மீறிய கனிமவள வாகனம் அதிகாரிக்கு கொலை மிரட்டல் விடுத்த மாபியா கும்பல்!




தென்காசி மாவட்டம் புளியரை சோதனைச் சாவடி அருகே மோட்டார் வாகன ஆய்வாளர் குமார் மேற்கொண்ட சோதனையில், *KL 23 X 4910* என்ற பதிவு எண்ணுடைய கனிமவள ஏற்றுமதி வாகனம், தமிழ்நாடு தற்காலிக அனுமதி சிட்டை பெற்றிருக்காமல் இயங்கியது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காரணமாக, ஆய்வாளர் அந்த வாகனத்தை புளியரை காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

ஆய்வாளரை மிரட்டிய மாபியா கும்பல்

வாகன உரிமையாளர்கள், தங்களது வாகனத்தை விடுவிக்குமாறு ஆய்வாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஆய்வாளர் காவல்துறைக்கு தகவல் தெரிவித்தவுடன், வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். ஆனால், இதற்குப் பின்னணியில் மாபியா கும்பல் ஆய்வாளரை கொலை மிரட்டல் விடுத்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

தவறான பதிவுகளுடன் ஓடும் கனிமவள வாகனங்கள்

மேலும், இந்த வாகனம் எம்-சென்ட் *(M-Sand)* ஏற்றி வந்தது. இதுபோன்று, வாகன உரிமை தவறாக இருக்கிறது, வாகன எண்ணும் *(Registration Number)* இன்ஜின் எண்ணும் *(Engine Number)* வேறுபடுகிறது போன்ற விஷயங்கள் வெளிச்சத்துக்கு வருகிறது.

சமூக ஆர்வலர்கள் இதுபோன்ற நிலவரங்கள் காவல்துறையினரால் விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசு நடவடிக்கை எடுக்குமா?

பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும், தென்காசி மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழக அரசு இதற்குத் தலையிட்டு,

அரசு விதிகளை மீறி இயங்கும் கனிமவள வாகனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்

புளியரை சோதனைச் சாவடி முன்பு எடை நிலையம் அமைக்க வேண்டும், இதன் மூலம் அரசு வருவாய் அதிகரிக்க முடியும்

மாபியா கும்பல் கொலை மிரட்டல் விடுத்த விவகாரத்தில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்கள்.

இந்த விவகாரம் குறித்து தென்காசி மாவட்ட நிர்வாகமும் தமிழக அரசும் அவசர நடவடிக்கை எடுக்குமா? என்பதை பொது மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

## ,தமிழகத்தில் தொடர்ந்து பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல், - ராமதாஸ் கடும் விமர்சனம்



சென்னை: பிப்-08 கிருஷ்ணகிரி அருகே அரசு பள்ளியில் மாணவி ஒருவர் ஆசிரியர்களால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது, கிளாம்பாக்கத்தில் இளம்பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது உள்ளிட்ட நிகழ்வுகளால் ஏற்பட்ட அதிர்ச்சியும், வேதனையும் விலகுவதற்கு முன்பாகவே, ஓடும் ரயிலில் கர்ப்பிணிக்கு பாலியல் தொல்லை, மணப்பாறையில் பள்ளிச் சிறுமிக்கு பாலியல் தொல்லை உள்ளிட்ட நிகழ்வுகள் அடிக்கடி நடப்பது மிகவும் வேதனையளிக்கிறது. தமிழகத்தில் தொடர்ந்து பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவது நல்லதல்ல" என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளப் பதிவில், "கோவையில் இருந்து திருப்பதி சென்ற விரைவு ரயிலில் பயணம் செய்த கருவுற்ற பெண்ணுக்கு மனித மிருகம் ஒன்று பாலியல் தொல்லை கொடுத்ததாகவும், அதை அந்தப் பெண் கண்டித்ததால் ஆத்திரமடைந்த அந்த மிருகம், அப்பெண்ணை வேலூர் மாவட்டம் கே.வி. குப்பம் அருகே ஓடும் ரயிலிலிருந்து தள்ளி விட்டு கொலை செய்ய முயன்றதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சி அளிக்கின்றன.

அதேபோல், திருச்சி மாவட்டம் மணப்பாறையில் தனியார் பள்ளி ஒன்றில் நான்காம் வகுப்பு பயிலும் மாணவிக்கு பள்ளியின் அறங்காவலர் பாலியல் தொல்லை கொடுத்ததாகக் கூறப்படும் செய்தியும் வேதனையளிக்கிறது. பள்ளியாக இருந்தாலும், ரயிலாக இருந்தாலும் பெண்கள் நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும் இருக்க முடியாது என்பதையே இந்த நிகழ்வுகள் காட்டுகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் உள்ள அரசு பள்ளியில் மாணவி ஒருவர் ஆசிரியர்களால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது, சென்னை கிளாம்பாக்கத்தில் இளம்பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது உள்ளிட்ட நிகழ்வுகளால் ஏற்பட்ட அதிர்ச்சியும், வேதனையும் விலகுவதற்கு முன்பாகவே இத்தகைய நிகழ்வுகள் அடிக்கடி நடப்பது மிகவும் வேதனையளிக்கிறது. தமிழகத்தில் தொடர்ந்து பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவது நல்லதல்ல.

தமிழகத்தில் எத்தகைய குற்றங்களைச் செய்தாலும் அதிலிருந்து எளிதாக தப்பி விடலாம் என்ற துணிச்சல் குற்றவாளிகளுக்கு ஏற்பட்டிருப்பது தான் இத்தகைய குற்றங்கள் அதிகரிப்பதற்கு காரணம் ஆகும். தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் தடையின்றி கஞ்சா விற்கப்படுவதும் இதற்கு இன்னொரு காரணம் ஆகும்.

பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனையை உடனடியாக பெற்றுத்தர வேண்டும். அவர்கள் மீதான வழக்கு விசாரணை முடியும் வரை அவர்களுக்கு பிணை வழங்கக்கூடாது. பேருந்து நிலையங்கள், ரயில்கள் ஆகியவற்றில் காவல்துறை பாதுகாப்பை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் கூறியுள்ளார்.

## தமிழக மீனவர்களை பாதுகாக்க உறுதியான நடவடிக்கை: மத்திய அரசுக்கு முத்தரசன் வலியுறுத்தல்



சென்னை: பிப்-08 மீன்பிடித்தல் தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையில் 2008-ம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் உணர்வை இலங்கை அரசு அலட்சியம் செய்து வருகிறது. மத்திய அரசின் வெளியுறவுத்துறை அரசியல் உறுதியுடன் நடவடிக்கைகள் மேற்கொண்டு, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும், என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு ஆயிரம் கிலோமீட்டர் தூரத்துக்கும் அதிக நீளம் கொண்ட கடற்கரையை பெற்றுள்ளது. 14 கடலோர மாவட்டங்களில் உள்ள நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்கள் மற்றும் கிராமங்கள் மீன்பிடி தொழிலை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன. இங்கு வாழும் மீனவர்களுக்கு வங்கக் கடல்தான் வாழ்வாதாரமாகும். கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குவது தொடர்ந்து நடைபெறுகிறது. அண்மைக் காலமாக, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை இலங்கை அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் 25-ம் தேதி கடலுக்கு சென்ற மூவாயிரத்து 500-க்கும் மேற்பட்ட மீனவர்கள், உரிய அனுமதியுடன் கடலுக்கு சென்றுள்ளனர். இவர்கள் கச்சத்தீவு - நெடுந்தீவுக்கு இடையே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினர் ஐந்து ரோந்து படகுகளில் வந்து தாக்குதல் நடத்தி, 34 மீனவர்களை கைது செய்துள்ளனர். இவர்களிடம் இருந்து மூன்று விசைப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நீதிமன்றம் 34 மீனவர்களில் 16 பேருக்கு தலா ரூ.50 ஆயிரம் (இலங்கை பண மதிப்பில்) வீதம் அபராதம் விதித்து, அபராதம் கட்டத் தவறினால் ஆறு மாதம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பளித்துள்ளது.

இதேபோல, இரு படகு ஓட்டுநர்களுக்குக்கும், ஒரு படகு உரிமையாளருக்கும் தலா ரூ.60.50 லட்சம் அபராதம் விதித்து, இந்த அபராதத் தொகையை கட்டத்தவறினால் ஓராண்டு சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பளித்துள்ளது. மேலும் 15 மீனவர்கள் படகு குறித்த ஆவணங்களை பிப்.10-ம் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு, மூன்று விசைப் படகுகளை அரசுடைமையாக்கியுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் இலங்கை கடற்படையினர் சுட்டதில் சின்னக்குடி மீனவர் பாண்டியன் உயிரிழந்தார். இலங்கை தூதரை நேரில் அழைத்து கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மீன்பிடித்தல் தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையில் 2008-ம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் உணர்வை இலங்கை அரசு அலட்சியம் செய்து வருகிறது. மத்திய அரசின் வெளியுறவுத்துறை அரசியல் உறுதியுடன் நடவடிக்கைகள் மேற்கொண்டு, தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு முத்தரசன் கூறியுள்ளார்.

## திருப்பரங்குன்றம் படிப்பாதையில் அசைவ உணவு சாப்பிட்டோர் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? - ஜான் பாண்டியன்



பழநி: பிப்-08 திருப்பரங்குன்றம் படிப்பாதையில் அசைவ உணவு சாப்பிட்டோர் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்பதை முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்க வேண்டும் என தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான்பாண்டியன் தெரிவித்தார்.

பழநி முருகன் கோயிலுக்கு தரிசனம் செய்வதற்காக வந்த தமிழக மக்கள் முன்னேற்றக் கழக தலைவர் ஜான் பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். திருப்பரங்குன்றம் மலை விவகாரத்தில் நடக்கக் கூடாத ஒன்று நடக்கிறது. மதக் கலவரத்தை தூண்டினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறும் திமுக அரசு, அங்குள்ள படிப்பாதையில் அசைவ உணவு சாப்பிட்டோர் மீது நடவடிக்கை எடுக்கவில்லையே ஏன்? இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்க வேண்டும்.

அசைவ உணவு சாப்பிட்டோர் மீது முதலில் நடவடிக்கை எடுத்திருந்தால் பக்தர்கள் ஒன்றுகூடி போராட்டதை கையில் எடுத்திருக்க மாட்டார்கள். தமிழகத்தில் மதுவைவிட கஞ்சா புழக்கம் அதிகரித்துள்ளது. அரசு ஊழியர்களுக்காக தேர்தல் அறிக்கையில் கூறிய எதையும் திமுக அரசு செய்யவில்லை. இதன் பிரதிபலிப்பு வரும் 2026 தேர்தலில் தெரியும். இவ்வாறு அவர் கூறினார்.

## திருப்பரங்குன்றம் விவகாரம்: மதுரை ஆட்சியர் ஒரு சார்பாக செயல்படுவதாக இந்து முன்னணி குற்றச்சாட்டு

சென்னை: பிப்-08 திருப்பரங்குன்றம் மலையில் உயிர் பலியிடுவது தொடர்பாக வழக்குகள் நிலுவையில் உள்ளபோது வழக்கை நீர்த்துப்போகச் செய்ய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் மதுரை மாவட்ட ஆட்சியர் செய்தி வெளியிட்டுள்ளார். எனவே, மாவட்ட ஆட்சியர் பிப்.5-ம் தேதி அன்று ஒருதலைப் பட்சமாக மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்படுத்தும் விதத்திலும் நீதிமன்ற நடவடிக்கைகளை அவமதிக்கும் விதத்திலும் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையை உடனடியாக வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று இந்து முன்னணி அமைப்பின் மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த 5.2.2025 தேதியிட்ட



மதுரை மாவட்ட ஆட்சியர், உண்மைகளை மறைத்து ஒரு தரப்பினர் தாக்கல் செய்த மனுக்களை மட்டும் குறிப்பிட்டு ஒருதலைப்பட்சமாக பத்திரிகை செய்தி வெளியிட்டிருப்பது கடுமையான கண்டனத்துக்குரியதாகும். கந்தூரி கொடுப்பது சம்பந்தமாக திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியரால் கடந்த 31.12.2024 அன்று நடந்த கூட்டத்தில், இதற்கு முன்பு கந்தூரி நடைபெற்றதாக எவ்வித ஆதாரங்களும் இல்லை என்ற காரணத்தால் புதிதாக மலைமேல் கந்தூரி கொடுக்க மறுப்பு தெரிவித்து நீதிமன்றத்தின் மூலம் உரிய பரிகாரம் தேடிக்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

மேலும் திருப்பரங்குன்றம் மலையில் உயிர்ப்பலி செய்யக்கூடாது என்று உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து வழக்கு விசாரணை நிலுவையில் இருக்கும் நிலையில் திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் மீண்டும்30.01.2025அன்று ஏதோ சில அரசியல் கட்சிகளை வைத்து அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தியதாக அறிவித்திருப்பது நீதிமன்ற நடவடிக்கையை உதாசீனப்படுத்துவதாக உள்ளது.

குறிப்பாக, அனைத்து கட்சிக் கூட்டத்துக்கு சாதகமான அரசியல் கட்சிகளை மட்டும் அழைத்துள்ளார். பாஜக, தமிழ் மாநில காங்கிரஸ் உள்ளிட்ட பலரை அழைக்கவில்லை. அதிலும் அதிமுகவினர் கூறும்போது "எங்களை அழைக்கவேயில்லை, நாங்கள் கலந்துகொள்ளாத போது எப்படி கையெழுத்திட மறுத்ததாக அதில் குறிப்பிடலாம்" என்று அந்தக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

# கள்ளக்குறிச்சி தனியார் பள்ளி கலவர வழக்கில் 916 பேர் மீது வழக்கு: 24,000 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல்




விழுப்புரம்: பிப்-08 கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலத்தை அடுத்த கனியாமூர் தனியார் பள்ளியில் கடந்த 2022-ம் ஆண்டு ஜூலை மாதம் பள்ளி மாணவி மர்மமான முறையில் உயிரிழந்ததைத் தொடர்ந்து பள்ளியில் ஏற்பட்ட கலவரம் தொடர்பாக சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி 916 பேர் மீது வழக்குப் பதிவு செய்து, 24 ஆயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையை இன்று (பிப்.7) விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலத்தை அடுத்த கனியாமூர் தனியார் பள்ளியில் பயின்ற மாணவி மர்மமான முறையில் உயிரிழந்ததைத் தொடர்ந்து பள்ளியில் பெரும் கலவரம் ஏற்பட்டது. இந்த கலவரத்தில் பள்ளி உடைமைகள் திருடப்பட்டும், காவல்துறை வாகனங்களை தீவைத்து எரித்தும், சேதப்படுத்தியும், மாடுகளையும் திருடிச் சென்றனர். இதையடுத்து போலீஸார் துப்பாக்கிச்சூடு நடத்தி கலவரத்தைக் கட்டுப்படுத்தினர். இந்தக் கலவர வழக்கை சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வந்தது. 300-க்கும் மேற்பட்டோரை கைது செய்தனர்.

கடந்த இரு வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற விசாரணையின் முடிவில் விழுப்புரம் நீதிமன்றத்தில் 58 பேர் மீதும், கள்ளக்குறிச்சி நீதிமன்றத்தில் 858 பேர் மீதும் என மொத்தம் 916 பேர் மீது, 24 ஆயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை இன்று சிறப்பு புலனாய்வுக் குழு போலீஸார் சார்பில் தாக்கல் செய்யப்பட்டது. அதன்படி பள்ளியில் நடந்த கலவரம் தொடர்பாக, 666 பேர் மீது 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்கங்களும், 53 இளம் சிறார்களுக்கு எதிராக, சிறார் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் காவல்துறை பாதுகாப்பிற்காக, சேலத்தில் இருந்து வந்த வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தி சேதப்படுத்தியது தொடர்பாக 120-க்கும் மேற்பட்டோர் மீதும், பள்ளி வளாகத்தில் இருந்த பசு மாடுகளை திருடிச் சென்ற வழக்கில் 5 பேர் மீதும், 124 பேருக்கு எதிராக கள்ளக்குறிச்சி நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கான விசாரணை மிக விரைவில் நடைபெறுவதாக தகவல் வெளியான நிலையில், இதுகுறித்த முதல் கட்ட விசாரணை விழுப்புரம் சிறார் நீதிமன்றத்தில் வரும் 21-ம் தேதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வழக்கில் மாணவியின் தாயார் செல்வி முதல் குற்றவாளி எனவும், 2-வது குற்றவாளி விசிகவைச் சேர்ந்த திராவிடமணி என குறிப்பிடப்பட்டுள்ளது.

# சென்னை குடிநீர் வாரிய குறைதீர் கூட்டம் நாளை 15 இடங்களில் நடைபெறுகிறது





சென்னை: பிப்-08 சென்னை குடிநீர் வாரியத்தின் மாதாந்திர குறைதீர் கூட்டம், 15 பகுதி அலுவலகங்களிலும் நாளை (பிப்.08) நடைபெறுகிறது.

இது தொடர்பாக சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், ஒவ்வொரு மாதமும் 2-வது சனிக்கிழமை குறை தீர்க்கும் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்துக்கான குறை தீர்க்கும் கூட்டம் நாளை காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை குடிநீர் வாரியத்தின் 15 இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்களிலும் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் தொடர்பான பிரச்சினைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவிக்கலாம். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# மார்ச் 24, 25 தேதிகளில் வேலை நிறுத்தப் போராட்டம்: வங்கி தொழிற்சங்கங்கள் அறிவிப்பு



சென்னை: பிப்-08 வங்கிகளில் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும், வங்கிகளுக்கு வாரத்துக்கு 5 நாட்கள் பணி நாளாக அறிவிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் மார்ச் 24 மற்றும் 25-ம் தேதிகளில் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்று வங்கி தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதுகுறித்து, வங்கி தொழிற்சங்கங்களின் ஐக்கிய சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வங்கி ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாமல் உள்ளன. குறிப்பாக, வங்கிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும். தற்காலிக ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். வங்கிகளில் வாரத்துக்கு 5 நாட்கள் வேலை நாளாக அறிவிக்க வேண்டும். பொதுமக்களின் தாக்குதலில் வங்கி அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை பாதுகாக்க போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

ஊழியர் நல நிதிக்கு வருமானவரி பிடித்தம் செய்யக் கூடாது. வங்கிகளில் அயல்பணி மூலம் வெளியாட்களை பணி நியமனம் செய்யக் கூடாது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் மார்ச் 24 மற்றும் 25-ம் தேதிகளில் 48 மணி வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறும்.

மேலும், வரும் மார்ச் 3-ம் தேதியன்று டெல்லியில் உள்ள நாடாளுமன்றம் முன்பாக தர்ணா போராட்டம் நடைபெறும். இந்தப் போராட்டத்தில் அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கம், ஊழியர் சங்கம், இந்திய வங்கி ஊழியர் சம்மேளனம் உள்ளிட்ட 9 சங்கங்கள் பங்கேற்கின்றன, என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாம்பவர்வடகரை பேராட்சிக்கு செயல் அலுவலர் நியமனம் செய்ய கோரிக்கை




தென்காசி பிப்-08 மாவட்டம் சாம்பவர்வடகரை பேரூராட்சிக்கு ஐந்து மாதத்திற்கு மேலாக தனி செயல் அலுவலர் இல்லாமல் உள்ளதால் பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டு வருகிறார்கள்

நேரில் சந்தித்து தங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை சொல்ல இயலாத சுழல்& பணிகள் தேக்கம் அடைவதாக கூறப்படுகிறது

தற்போது அச்சன்புதூரில் செயல் அலுவலராக பணி புரிந்து வரும் மோகனமாரியம்மாள் என்பவர் கூடுதல் பொறுப்பாக சாம்பவர்வடகரை பேரூராட்சியிலும் பொறுப்பு வகித்து வருகிறார்

அச்சன்புதூர், சாம்பவர்வடகரை ஆகிய இரண்டு பேரூராட்சிகளை செயல்அலுவலர் கவனித்து வருவதனால் ஐந்து மாதத்திற்கு மேலாக சாம்பவர்வடகரை பேரூராட்சி பகுதியில் பல பணிகள் தேக்கம் அடைந்துள்ளதாக கூறப்படுகிறது

.தற்போது செயல் அலுவலர் கடந்த 31.01.2025 வெள்ளிக்கிழமை அன்று வந்ததாகவும் தற்போது வரை வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

ஆகையினால் பொதுமக்களின் நலன் கருதி சாம்பவர் வடகரை பேரூராட்சி அலுவலகத்திற்கு உடனடியாக செயல் அலுவலர் நியமனம் செய்ய வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திற்கு பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைக்கின்றனர்

# புதுச்சேரியில் மக்கள் தலைவர் வ.சுப்பையா பிறந்தநாள் நினைவு நிகழ்வு நடைபெற்றது



புதுச்சேரி பிப்-08 மாநில மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் , நமது வழிகாட்டுத் தலைவர்களில் ஒருவரான மக்கள் தலைவர் திரு. வ. சுப்பையா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லித்தோப்பு சிக்னல் அருகில் உள்ள அன்னாரது சிலைக்கு , கழகத்தின் தலைவர் மு. இராமதாஸ் அவர்கள் தலைமையில் சேர்மன் R L வெங்கட்ராமன் அவர்கள் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது .

நிகழ்ச்சியில் மாநில பொதுசெயலாளர் எ.மு. ராஜன் , செயலாளர் ரவிகுமார், துணை செயலாளர்கள் கலியபெருமாள் , ராதாகிருஷ்ணன், உதவி செயலாளர் ஆண்டாள், கிழக்கு மாவட்ட தலைவர் சந்திரன், வார்டு உறுப்பினர் தனஞ்செயன், காமராஜ் நகர் தொகுதி பொறுப்பாளர் திரு. தயாளன் , கதிர்காமம் தொகுதி பொறுப்பாளர் திருமதி. பாரத மாதா, லாஸ்பேட்டை தொகுதி பொறுப்பாளர் மகேந்திரன், ரகோத்தமன் ஏம்பலம் முருகையன் , சுப்புராயலு, நெல்லித்தோப்பு டெல்லிபாபு, கதிர்காமம் கணேசன் , லாஸ்பேட்டை கவிதா, நிஷா, சோபியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பழனி பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு ஜேசிஐ காரைக்குடி கிங்ஸ் சார்பாக உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.





பிப்-08 ஆண்டுதோறும் தை மாதத்தில் பக்தர்கள் பழனிக்கு பாதயாத்திரை சென்று வருகின்றனர். இந்த ஆண்டு காரைக்குடியில் இருந்து திருப்பத்தூர், சிங்கம்புணரி வழியாக பழனி பாதயாத்திரை செல்லும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு ஜேசிஐ காரைக்குடி கிங்ஸ் சார்பாக உணவுப் பொருட்கள், பிஸ்கட் மற்றும் தண்ணீர் பாட்டில் ஆகியவை வழங்கப்பட்டன. திருப்பத்தூரில் இருந்து சிங்கம்புணரி செல்லும் சாலையில் ஜேசிஐ காரைக்குடி கிங்ஸ் தலைவர் ஜேசி மருதுபாண்டியன், திட்ட இயக்குநர் ஜேசி வினோத், பிஆர் மார்க்கெட்டிங் மண்டல இயக்குநர் ஜேசி இராமசந்திரன், பொருளாளர் ஜேசி ஜெயக்குமார் மற்றும் செயலாளர் ஜேசி ஹரிஹரன் மற்றும் உறுப்பினர்கள் இதற்கான ஏற்பாட்டை சிறப்பாக செய்திருந்தனர்.

# குன்னூர் நகராட்சியில் கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது



குன்னூர்: பிப்-08 நகராட்சியில் கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு உறுதிமொழி வணிகம்" ஏற்கப்பட்டது இந்திய அரசியலமைப்பின் கீழ் மனிதர்களைப் பண்டமாக்கும் நடைமுறை, கட்டாய உழைப்பு மற்றும் கொத்தடிமை உழைப்பை தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதுவேன், கொத்தடிமை உழைப்பை முற்றிலுமாக ஒழிக்க சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவேன், எந்தவொரு தொழிலிலும் கொத்தடிமை உழைப்பை அடையாளம் கண்டு உரிய நடவடிக்கை எடுப்பேன், எந்தவொரு தொழிற்சாலையிலும் முன்கூட்டியே பணம் செலுத்தி தொழிலாளர்களை பணியமர்த்துவதைத் தவிர்ப்பேன், கொத்தடிமைத் தொழிலாளர்களின் மீட்பிற்கும் அவர்களின் முழு மறுவாழ்வுக்கும் நான் பாடுபடுவேன், இந்திய அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ளபடி அனைவரின் அடிப்படை உரிமைகளையும் உறுதி செய்வதற்காக கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்புச் சட்டத்தை முறையாக செயல்படுத்துவதை ஆதரிப்பதன் மூலம் தமிழ்நாட்டை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக மாற்ற நான் அயராது பாடுபடுவேன் என்று குன்னூர் நகராட்சி ஆணையாளர் இளம்பரிதி முன்னிலையில் நகராட்சி அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.




விழுப்புரம் மாவட்டத்தில் புதிய பேருந்து நிலையம் அருகாமையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு (08/02/2025) ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை முழுமையாக புறக்கணித்து உள்ள மோடி அரசு கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது இக்கூட்டத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் , திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர் திரு.எ.வ.வேலு அவர்களும் தலைமை கழக பேச்சாளர் திருமதி நாகம்மை கருப்பையா அவர்களும் கண்டன உரையாற்றுகிறார்கள் நிகழ்வில் - ஒன்றிய - கிளைக் கழக நிர்வாகிகள் , சார்பு அணி நிர்வாகிகள் , உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ,கழக உடன்பிறப்புகள் திரளாக பங்குபெற வேண்டுமாய் அன்புடன் அழைக்கிறார்

# தென்காசியில் கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு உறுதிமொழி நிகழ்வு நடைபெற்றது



பிப்-08 கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி நிகழ்வு.
தென்காசி மாவட்டம் நிகழ்வின் முக்கிய அம்சங்கள்.
நிகழ்வு கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு நாளை முன்னிட்டு உறுதிமொழி ஏற்பு
தென்காசி மாவட்ட காவல் அலுவலகம்
தலைமை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வேணுகோபால்
உத்தரவு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S.அரவிந்த்
அனைத்து காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர் உறுதிமொழி பிரதான அம்சங்கள்.
இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மனிதரை வணிகப் பொருளாக்குதல் தண்டனைக்குரிய குற்றம்.
கடன் பிணையத் தொகை வழங்கி கட்டாய பணிக்கு வற்புறுத்தல் சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்து.
கொத்தடிமை தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிக்கும் முயற்சி.
சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல். எந்தத் தொழிலில் இருந்தாலும் கொத்தடிமை தொழிலாளர்களை அடையாளம் கண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல். தொழிற்சாலைகளில் முன்பணம் கொடுத்து பணியமர்த்துவதைத் தவிர்க்க வலியுறுத்துதல்.
மீட்கப்பட்ட தொழிலாளர்களுக்குத் முழுமையான மறுவாழ்வு வழங்குதல்.
இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளை அனைவருக்கும் உரித்தாக்க உறுதுணையாக செயல்படுதல்.
தமிழ்நாட்டை கொத்தடிமை தொழிலாளர் இல்லாத மாநிலமாக" உருவாக்க உறுதி கூறுதல்.
ஏற்பாடு செய்யப்பட்ட காவல் நிலையங்கள்
மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து காவல் நிலையங்களில் காவல்துறையினர் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.
இந்த நிகழ்வு, காவல்துறையின் சமூகப் பொறுப்புணர்வை அதிகரிக்கவும், கொத்தடிமை தொழிலாளர் மீதான அநீதியை முற்றிலும் ஒழிக்கவும் ஒரு முக்கியமான நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.



விழுப்புரம் மாவட்டத்தில் சப்-இன்ஸ்பெக்டர்கள் இடமாற்றம்
விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள காவல் நிலையங்களில் பணியாற்றிய 18 சப் இன்ஸ்பெக்டர்கள் நிர்வாக காரணங்களால் பணியிட மாற்றசெய்ய மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# கவுண்டமணியின் ,ஒத்த ஓட்டு முத்தையா, ட்ரெய்லர் எப்படி?




கவுண்டமணி கதையின் நாயகனாக நடித்துள்ள 'ஒத்த ஓட்டு முத்தையா' திரைப்படத்தின் ட்ரெய்லர் வெளியாகி கவனம் ஈர்த்துள்ளது. இப்படத்தை இயக்கியுள்ள சாய் ராஜகோபால், 70-க்கும் மேற்பட்ட படங்களுக்கு கவுண்டமணி - செந்திலுக்கான நகைச்சுவைப் பகுதிகளை எழுதிய அனுபவம் உடையவர்.
கவுண்டமணியுடன் இணைந்து யோகி பாபு, சித்ரா லட்சுமணன், சிங்கமுத்து, மொட்டை ராஜேந்திரன், ரவிமரியா உள்ளிட்ட பலர் நடித்துள்ள இப்படத்தில்
சிங்கமுத்துவின் மகன் வாசன் கார்த்திக், நாகேஷின் பேரன் கஜேஷ், மயில்சாமியின் மகன் அன்பு மயில்சாமி ஆகியோர் முக்கியக் கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். சித்தார்த் விபின் இசையமைத்துள்ளார்.
தேர்தலில் மக்கள் வாக்களிப்பதை மையமாக வைத்து உருவாகியுள்ள கதைக்களத்தில், கவுண்டமணியின் அதிரடியான அரசியல் வசனங்கள் இடம் பெற்றுள்ளன. கவுண்டமணியின் காமெடிகளுக்கு ஏற்றாற்போல் யோகிபாபு கவுன்டர்களுடன் சப்போர்ட் செய்கிறார். அக்கால கவுண்டமணி ஸ்டைலில் சில காமெடி வசனங்களும் இடம்பெற்றுள்ளன.
'கரன்ட் கம்பியை முயல் கடிச்சிடுச்சி...'என்ற வசனம், யோகி பாபு தவழ்ந்தபடி சென்று மொட்டை ராஜேந்திரன் காலில் விழுவது போன்ற அரசியல் பகடிகளும் கவனம் ஈர்க்கின்றன. ஆனால், திரைமொழி மிகவும் 'வீக்'காக இருப்பதை ட்ரெய்லரின் நாடகத்தன்மை காட்டிவிடுகிறது.

# விடாமுயற்சி Vs துணிவு: முதல் நாள் வசூலில் டாப் எது?



அஜித்தின் 'விடாமுயற்சி' படத்தின் முதல் நாள் வசூல் குறித்த விவரம் வெளியாகியுள்ளது. அவரது முந்தைய படமான 'துணிவு' உடன் ஒப்பிடும்போது, முதல் நாள் வசூலில் 'விடாமுயற்சி'யும் குறிப்பிடத்தக்க ஓபனிங் கொண்ட படம்தான் என்பதையே தரவுகள் காட்டுகின்றன.
மகிழ் திருமேனி இயக்கத்தில் அஜித் நடிப்பில் உருவான 'விடாமுயற்சி' படம் நேற்று (பிப்.6) உலகெங்கும் வெளியானது. 2023-ம் ஆண்டு அஜித்துக்கு 'துணிவு' படம் வெளியானது. அதற்குப் பிறகு வெளியாகும் படம் என்பதால் அஜித் ரசிகர்கள் முதல் நாளில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். விமர்சன ரீதியில் 'ஆவரேஜ்' தன்மையைக் கொண்டுள்ள இந்தப் படம், அஜித் ரசிகர்களுக்கு புதுவிதமான திரைஅனுபவம் தரக்கூடும் என நம்பப்படுகிறது.
லைகா நிறுவனம் தயாரிப்பில், அதிகப்படியான திரையரங்குகளில் வெளியான 'விடாமுயற்சி' முதல் நாளில் இந்திய அளவில் கிட்டத்தட்ட ரூ.22 கோடி வசூலித்துள்ளதாக நம்பகமான வர்த்தக நிலவரங்கள் தெரிவிக்கின்றன. உலக அளவிலான வசூல் விவரம் வெளிவந்தால், இந்த எண்ணிக்கை வெகுவாக கூடும் என்றும் தெரிகிறது. ஹெச்.வினோத் இயக்கத்தில் அஜித் நடித்த 'துணிவு' படத்தின் இந்திய அளவிலான முதல் நாள் வசூல் 24.4 கோடி என்பது நினைவுகூரத்தக்கது.
2023-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்படம், 2025-ம் ஆண்டு பிப்ரவரியில் வெளியாகியுள்ளது. பொங்கலுக்கு வெளியாக வேண்டிய படம், கதை சர்ச்சையில் சிக்கி பின்பு பேசி தீர்க்கப்பட்டு இப்போது வெளியாகி இருக்கிறது. மகிழ் திருமேனி இயக்கத்தில் அஜித், அர்ஜுன், த்ரிஷா, ரெஜினா, ஆரவ் உள்ளிட்ட பலர் நடித்துள்ள படம் 'விடாமுயற்சி'. அனிருத் இசையமைப்பாளராக பணிபுரிந்துள்ள இப்படத்தின் ஒளிப்பதிவாளராக ஓம் பிரகாஷ், எடிட்டராக ஸ்ரீகாந்த் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர்.

# தேறாத இங்கிலாந்தை விடுத்து ,ஆப்கன், போன்ற திறன்மிக்க அணிகளை பிசிசிஐ அழைக்கலாமே!



இந்தியாவுக்கு எதிரான டி20 தொடரில் சமீபமாக 1-4 என்று செம உதை வாங்கியது இங்கிலாந்து. நேற்று நடைபெற்ற இரு அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டியில் விக்கெட் இழப்பின்றி 75 ரன்கள் என்ற நிலையில் இருந்து கடுமையாகச் சரிந்தது. சுழற்பந்து வீச்சை ஆடத் தெரியவில்லை. ஜடேஜாவிடம் 3 விக்கெட்டுகளைக் கொடுத்தது. கடைசியில் 248 ரன்களை எடுக்க இந்திய அணி இதை ஒரு ஸ்கோராக கூட மதிக்காமல் ஆடி வெற்றி பெற்றது.
எண்டெர்டெயின்மெண்ட் என்ற ஒரு வார்த்தையை அடிக்கடி பிரெண்டன் மெக்கல்லம் பயன்படுத்துகிறார். அதாவது இங்கிலாந்து எந்தெந்த ஊர்களுக்குச் செல்கிறதோ அந்த ஊர் மக்கள் மகிழ்ச்சியடையும் விதமாக அதாவது எந்த நாட்டுக்குச் செல்கிறார்களோ அந்த நாட்டை வெற்றிபெறச்செய்து 'என்டர்டெயின்' செய்யும் விதமாக இங்கிலாந்து தோற்க வேண்டும் என்று புரிந்து கொண்டாரா மெக்கலாம் என்பது புரியவில்லை.

# இந்திய கிரிக்கெட் வீராங்கனை திரிஷாவுக்கு ரூ.1 கோடி பரிசுத்தொகை



ஹைதராபாத்: இந்திய கிரிக்கெட் வீராங்கனை கோங்கடி திரிஷாவுக்கு ரூ.1 கோடி பரிசுத்தொகையை தெலங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி வழங்கிப் பாராட்டினார்.
மலேசியாவில் சமீபத்தில் நடந்த 19 வயதுக்குட்பட்ட மகளிர் உலக கோப்பை கிரிக்கெட் டி-20 இறுதி போட்டியில் இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்க அணிகள் மோதின. இதில் இந்திய மகளிர் அணி வெற்றி பெற்று கோப்பையைத் தட்டி சென்றது. முக்கியமான இப்போட்டியில் சிறப்பாக விளையாடி 44 ரன்கள் குவித்தது மட்டுமின்றி, 3 விக்கெட்களை சாய்த்த தெலங்கானாவை சேர்ந்த கோங்கடி திரிஷாவுக்கு ஆட்ட நாயகி மற்றும் தொடர் நாயகி விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.
தற்போது நாடு திரும்பியுள்ள கோங்கடி திரிஷாவுக்கு வாழ்த்துகள் குவிந்த வண்ணம் உள்ளன. இந்நிலையில், நேற்று அவர் ஹைதராபாத்தில் தெலங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.
அப்போது தெலங்கானா அரசு சார்பில் கோங்கடி திரிஷாவுக்கு முதல்வர் ரேவந்த் ரெட்டி, ஊக்க பரிசாக ரூ. 1 கோடிக்கான காசோலையை வழங்கி பாராட்டினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066